வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 17.07.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் 19ஆம் தேதி முதல், மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ரோமானியா ஆகிய 3 நாடுகளுக்கு **அரசு முறைப் பயணம்** மேற்கொள்கிறார்.

**ஹைட்ரஜன் எரிபொருள்** மூலம் இயங்கும் நாட்டின் முதலாவது ரயிலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, அரியானா மாநிலம் **ஜிண்ட் ரயில் நிலையத்தில்** இருந்து, கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

நாடாளுமன்றத்தின் **மழைகாலக் கூட்டத்** தொடரை முன்னிட்டு, மத்திய அரசு, வரும் ஞாயிற்றுக் கிழமை, **அனைத்து நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு** அழைப்பு விடுத்துள்ளது.

புதுச்சேரி அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று புதுடெல்லியில், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சரை சந்தித்து, புதுச்சேரியில், **தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழகம்** ஒன்றை அமைக்கக் கோரினார்.

---

*முர்மு பயணம் 1 (10)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் 19ஆம் தேதி முதல், மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ரோமானியா ஆகிய 3 நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். வரும் 20ஆம் தேதி மால்டோவாவில், அந்நாட்டு அதிபர் திருமதி மையா ஸாந்து மற்றும் இதர தலைவர்களை, அவர் சந்திக்கிறார். இருநாடுகளுக்கும் இடையிலான நாடாளுமன்ற நட்புறவுக் குழுவினரின் உறுப்பினர்கள், வர்த்தகத் தலைவர்கள், மற்றும், இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடல் கூட்டங்களையும் அவர் நடத்துகிறார். இந்திய குடியரசுத் தலைவர்

ஒருவர், மால்டோவா செல்வது இதுவே முதல்முறையாகும். குடியரசுத் தலைவரின் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்……

(வாய்ஸ்)

*முர்மு பயணம் 2 (14)*

(வாய்ஸ்)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 3 நாடுகள் பயணத்தின் 2ஆம் கட்டமாக, வரும் 21ஆம் தேதி, வடக்கு மாசிடோனியா செல்கிறார். அந்நாட்டு அதிபர் திருமதி கோல்டானா டாவ்கோவா உள்ளிட்ட தலைவர்களை அவர் சந்திக்கிறார். இருநாட்டு வர்த்தகப் பேரவைக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார். வடக்கு மாசிடோனியா நாடாளுமன்றத்திலும் குடியரசுத் தலைவர் உரையாற்ற இருக்கிறார். தொடர்ந்து, வரும் 23ஆம் தேதி, ரோமானிய செல்லும் குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு. நிகுசார் டான் உள்ளிட்ட தலைவர்களையும், இருநாட்டு நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் உறுப்பினர்களையும் சந்திக்கிறார். ரோமானியாவில் உள்ள இந்திய சமூகத்தினரையும் அவர் சந்தித்து கலந்துரையாடுவார் என அறிவிக்கப் பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் 3 நாடுகள் பயணம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில், இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதிபலிப்பதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------------------

*மோடி ஹைட்ரஜன் 1 (4)*

ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் நாட்டின் முதலாவது ரயிலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, அரியானா மாநிலம் ஜிண்ட் ரயில் நிலையத்தில் இருந்து, கொடியசைத்து தொடக்கி வைத்தார். இவ் விழா குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

(வாய்ஸ்)

*மோடி ஹைட்ரஜன் 2 (16)*

(வாய்ஸ்)

ரயில்வே துறையில் கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், ஜிண்ட்-சோனிப்பட் இடையிலான ஹைட்ரஜன் ரயில், மக்களுக்கான நல்லாட்சியின் சிறந்த அடையாளமாகவே திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது

உரையில் கூறினார். முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட, சுற்றுச் சூழலுக்கு உகந்த ஹைட்ரஜன் ரயில்கள், உலக அளவில், ஒருசில நாடுகளில் மட்டுமே இருப்பதையும், 3 ஆயிரத்து 200 குதிரைத் திறன் கொண்ட இந்தியாவின் முதலாவது ஹைட்ரஜன் ரயில், உலகிலேயே மிக நீண்ட ஹைட்ரஜன் ரயிலாக அமைவதையும் அவர் சுட்டிக் காட்டினார். ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், விழாவில் பேசுகையில், நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சியில், முக்கிய வரலாற்று சாதனை தற்போது எட்டப் பட்டுள்ளதாக கூறினார். பெட்ரோல்-டீசல், அல்லது, மேல்நிலை மின்சாரக் கம்பிகளின் தேவையின்றி, **ஹைட்ரஜன் செல்** தொழில்நுட்பத்தில் இயங்கும் இந்த ஹைட்ரஜன் ரயில்களை, எதிர்காலத்தில், **கல்கா-சிம்லா மார்க்கம்** உட்பட, பாரம்பரிய வழித் தடங்களில் இயக்குவதற்கான வாய்ப்புகளையும், ரயில்வே துறை ஆராய்ந்து வருகிறது.

--------------------------

*மோடி – விழா (12)*

ஹரியானாவில் நடைபெற்ற விழாவின் போது, **டெல்லி-அமிர்த்சர்-கத்ரா விரைவுச் சாலை** உட்பட, பல்வேறு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 12 ஆயிரத்து 470 கோடி ரூபாயாகும். பின்னர் சண்டிகரில் நடைபெற்ற விழாவில், சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான, முக்கிய வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்தார். திட்டமிட்ட நகர்ப்புற வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் சண்டிகர் நகரின் வளர்ச்சியினால், பஞ்சாப், ஹரியானா, ஹிமாச்சல் ஆகிய 3 மாநிலங்களுமே பயன்பெறும் என்று அவர் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில், பல்வேறு ரயில்வே, மற்றும், சாலை மேம்பாட்டு பணிகளை தொடக்கி வைக்கிறார்.

--------------------------

*நிர்மலா* (14)

நாட்டில் அனைத்து கிராமங்கள், மற்றும் மக்களுக்கும், வங்கி சேவை கிடைக்கச் செய்வதே, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார். பல்வேறு மத்திய திட்டங்களின் கீழ், மக்களை தேடிச் சென்று கடனுதவிகளை வழங்க, ஆந்திர மாநிலம் நரசராவ் பேட்டில், இன்று நடைபெற்ற விழாவில் அவர் உரையாற்றினார். விவசாயிகள், மீனவர்கள், சாலையோர வியாபாரிகள் உட்பட, அனைத்துப் பிரிவு மக்களும் கடன் பெறத் தேவையான உத்தரவாதத்தை, மத்திய அரசே வங்கிகளுக்கு வழங்குவதால், மக்கள் இதை நன்கு பயன்படுத்திக் கொண்டு, வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என நிதியமைச்சர் கேட்டுக் கொண்டார். ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். விழாவின் போது 1லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, மொத்தம் 3 ஆயிரத்து 216 கோடி ரூபாய் கடன்கள் வழங்கப்பட்டன.

--------------------------

*அமித் ஷா* (8)

கொல்கத்தா தேசிய நூலகத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள உலக அருங்காட்சியகத்தை, வரும் ஞாயிற்றுக் கிழமை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா திறந்து வைக்கிறார். நாளை மேற்குவங்க மாநிலம் ஜூமாகச் பகுதியில், எல்லைப் பாதுகாப்புப் படையினரை அவர் நேரில் சந்தித்து கலந்துரையாடல் நடத்துகிறார். தொடர்ந்து சிலிகுரி பகுதியில், பிறப்பு-இறப்புகள் குறித்த பதிவு நிலவரங்கள், மற்றும், பல்வேறு நிர்வாக விஷயங்கள் குறித்து, உயர்நிலை கூட்டங்களை திரு. அமித் ஷா நடத்துவார் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

--------------------------

*அனைத்துக் கட்சி* (9)

நாடாளுமன்றத்தின் மழைகால கூட்டத் தொடர், வரும் 20ஆம் தேதி தொடங்குவதை ஒட்டி, மத்திய அரசு வரும் ஞாயிற்றுக் கிழமை புதுடெல்லியில், அனைத்து நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. நாடாளுமன்ற இரு அவைகளிலும், அலுவல்கள் சுமூகமான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில் அரசு இக்கூட்டத்தின் போது, அனைத்து அரசியல்

கட்சிகளின் ஒத்துழைப்பை நாடும். அடுத்த மாதம் 13ஆம் தேதி வரை நடைபெற உள்ள நாடாளுமன்றத்தின் மழைகால கூட்டத் தொடரில், பல்வேறு முக்கிய மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளன.

-------------------------

ஜவுளி (8)

புதுடெல்லியில் கடந்த 4 நாட்களாக நடைபெற்ற, ஜவுளித் துறைக்கான பாரத் டெக்ஸ் சர்வதேச கண்காட்சி, இன்று முடிவடைந்தது. உலக அளவில் புகழ்பெற்ற இந்திய ஜவுளித் துறையின் பல்வேறு பிரிவினரால் இக்கண்காட்சியில் அமைக்கப்பட்டு இருந்த அரங்குகளுக்கு, 138 நாடுகளைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் சர்வதேச வணிகர்கள் உட்பட, 15 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை புரிந்தனர். இந்திய ஜவுளித் துறையில், மொத்தம் 14 ஆயிரத்து 300 கோடி ரூபாய் புதிய முதலீடுகளுக்கு, கண்காட்சியின் போது உத்தரவாதம் பெறப்பட்டது.

-------------------------

மல்லாடி (9)

புதுச்சேரி அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று புதுடெல்லியில், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு .மன்சுக் மாண்டவியாவை சந்தித்து, கேலோ இண்டியா இயக்கத்தின் கீழ் புதுச்சேரியில், தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கக் கோரினார். காரைக்கால்-மாஹே பகுதிகளில், விளையாட்டு அரங்குகளை அமைக்க, மத்திய அரசு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். ஏனாமில், 2 விளையாட்டு அரங்குகள், மற்றும், 4 மினி விளையாட்டு அரங்குகளின் மேம்பாட்டுப் பணிகளுக்கும், திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், மத்திய அமைச்சரிடம் நிதி ஒதுக்கீடு கோரினார்.

-------------------------

புதுச்சேரி நாணயம் (11)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், மத்திய அரசின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டப் பயனாளிகளுக்கு, வரும் ஆகஸ்ட் மாதம் முதல், CBDC என்னும் மத்திய வங்கி டிஜிட்டல் நாணய முறையில் மட்டுமே, உணவு தானிய மானியம் வழங்கப்படும் என்பதால், பயனாளிகள் தங்களின் கைபேசி எண்ணை, குடிமைப் பொருள் வழங்கல் துறையின்

இணைய தளம் மூலம் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. ஆன்ட்ராய்டு அலைபேசிகளில், Canara Digital Rupee என்ற செயலி மூலம், டிஜிட்டல் நாணயத்தை பயனாளிகள் பெறலாம் என்றும், பழைய ஃபோன் வைத்து இருப்பவர்களுக்கு, பாதுகாப்பான வவுச்சர் குறியீட்டு எண் மூலம் டிஜிட்டல் நாணயம் வழங்க வழிவகை செய்யப் பட்டுள்ளதாகவும், குடிமைப் பொருள் வழங்கல் துறை அறிவித்துள்ளது.

-------------------------

*அண்ணா திடல் (16)*

புதுச்சேரி நகரின் மையப் பகுதியில், பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ், மறுமேம்பாடு செய்யப் பட்டுள்ள அண்ணா திடலை, கட்டிடப் பாதுகாப்புக் குறைவின் காரணமாக, முழுமையான பயன்பாட்டிற்கு விட முடியாத நிலையில், அப்பகுதியில் சமூக விரோதிகள் நடமாடுவதாக புகார்கள் பெறப் பட்டதை தொடர்ந்து, உள்ளாட்சித் துறை இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகள் இன்று, அண்ணா திடலில், நேரடி ஆய்வு மேற்கொண்டனர். அண்ணா திடலின் பாதுகாப்பிற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தனியார் காவலர்களை நியமிக்கவும், உள்ளாட்சித் துறை இயக்குநர், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ-மாணவிகளின் விளையாட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு, அண்ணா திடல் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும், அவர் கூறினார். அண்ணா திடலை சுற்றி உள்ள கடை வியாபாரிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற, நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளாட்சித் துறை இயக்குநர் தெரிவித்தார். நகராட்சி மூலம் கடை ஒதுக்கீடு பெற்ற வியாபாரிகள், ஒருமாத காலத்திற்குள் கடைகளை திறந்து வியாபாரம் செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

-------------------------

*வானிலை (10)*

காற்றழுத்தத் தாழ்வுப் பாதை காரணமாக, இன்றும்-நாளையும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வடக்கு கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 23ஆம் தேதி வரை, லேசான மழை

இருக்கலாம் என, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

--------------------------

*மகளிர் ஹாக்கி (8)*

சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் மகளிர் உலகக் கோப்பை போட்டித் தொடருக்கான 20 உறுப்பினர் இந்திய அணி, இன்று அறிவிக்கப் பட்டுள்ளது. சலீமா டெட்டே தலைமையிலான இந்த அணியில், கோல்கீப்பர் சவீதா, இஷிகா சௌத்ரி, நிக்கி பிரதான், நவநீத கவுர் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். வரும் ஆகஸ்ட் 15 முதல், 30ஆம் தேதி வரை, பெல்ஜியம், மற்றும், நெதர்லாந்தில் நடைபெற உள்ள, மகளிர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டித் தொடரில், இந்திய அணி, சீனா, இங்கிலாந்து, மற்றும், தென்னாப்பிரிக்க அணிகளுடன் சேர்ந்து, D பிரிவில் இடம் பெற்றுள்ளது.

--------------------------

*பேட்மிண்டன் (7)*

ஜப்பானிய ஓபன் பேட்மிண்டன் சேம்பியன் பட்டப் போட்டிகளின், மகளிர் ஒற்றையர் பிரிவில், நாளை டோக்கியோவில் நடைபெற உள்ள அரையிறுதிப் போட்டியில், இந்தியாவின் பி.வி. சிந்து, ஜப்பானிய வீராங்கனை சென் யு-ஃபி உடன் மோத இருக்கிறார். இன்று நடைபெறுவதாக இருந்த காலிறுதிப் போட்டியில் இருந்து, ஜப்பானிய வீராங்கனை நசோமி ஒக்குஹாரா விலகிக் கொண்டதை தொடர்ந்து, பி.வி. சிந்து, அரையிறுதி நிலைக்கு முன்னேறினார்.

--------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் 19ஆம் தேதி முதல், மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ரோமானியா ஆகிய 3 நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார்.

ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் நாட்டின் முதலாவது ரயிலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, அரியானா மாநிலம் ஜிண்ட் ரயில் நிலையத்தில் இருந்து, கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

நாடாளுமன்றத்தின் மழைகாலக் கூட்டத் தொடரை முன்னிட்டு, மத்திய அரசு, வரும் ஞாயிற்றுக் கிழமை, அனைத்து நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

புதுச்சேரி அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று புதுடெல்லியில், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சரை சந்தித்து, புதுச்சேரியில், தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கக் கோரினார்.